*17 ஜூன், 2015*

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தாய், இப்போது மீண்டும் உங்கள் மகிழ்ச்சியான நாட்கள் வரவிருப்பது உங்களுடைய புத்தியில் உள்ளது. நீங்கள் இதற்கு முயற்சி செய்கிறீர்கள். பாபா எப்படி மிக எளிதாக முயற்சி செய்வது என காட்டியுள்ளார். நாடக படி, இது உறுதியாக, உண்மையாக ஒரு கல்பதிற்கு முன்னர் இருந்ததாகும். நீங்கள் தெய்வங்களாக இருந்தீர்கள்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் ஒரு தெய்வமாக இருந்தேன் எனவும் மீண்டும் நான் அதே தெய்வமாக ஆகிக்கொண்டிருக்கின்றேன் என்ற விழிப்புணர்வை உறுதிசெய்துக் கொள்கின்றேன். நான் ஒரு கல்பதிற்கு முன்னர், இருந்த அதே ஆத்மா, ஒரு தங்கயுக தெய்வ ஆத்மா என உறுதியாக இருக்கிறேன். இனிமையான பாபா, “நான் யாரிடமிருந்து பிரிந்திருந்தனோ, என்னுடைய அதே பாபா நீங்கள் தான். நீங்கள் எப்படி எளிதாக முயற்சி செய்வது என கற்பிக்க மீண்டும் என்னுடைய வாழ்க்கையில் வந்துள்ளீர்கள்.”

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு : நீங்கள் சுயத்தை மாற்றக்கூடியவராகவும் உண்மையான தங்கமாகவும் ஆகி உங்களை மாற்றிக்கொண்டு ஒவ்வொரு பணியிலும் வெற்றியாளர் ஆகுவீர்களாக.

என்னை மாற்றிக்கொள்ளும் மனோபாவத்தை கொண்டிருப்பதில் உறுதியாக இருக்கிறேன். நான் பாதகமான சூழ்நிலைகளில் வளைந்துகொடுக்கும் தன்மையோடு இருந்து வெற்றி அடைகின்றேன். உறவுமுறைகளில் என் தாரகமந்திரம்: "மற்றவர்கள் மாறுகின்றார்களோ அல்லது இல்லையோ நான் மாற வேண்டும்." மாற்றத்தை கொண்டுவருவதில் நான் முதலில் என்ற மனோபாவத்தை ஏற்கின்றேன். என்னையே மாற்றிக்கொள்ளும் மனோபவத்தை ஏற்பது என்னை உண்மையான தங்கமாக ஆக்குகின்றது. உண்மையான தங்கத்திற்கு மட்டுமே மதிப்பு உள்ளதை நான் நினைவு செய்கின்றேன்.

## திருஷ்டி அல்லது தூய பார்வை

பாபா ஆத்மாவிற்கு : உங்களுடைய லட்சியம் மற்றும் நோக்கம் குழந்தைகளாகிய உங்கள் முன்னால் உள்ளது. நாம் அவ்வாறு ஆகிக்கொண்டிருக்கின்றோம். இது ஒரு சாதாரண மனிதனிலிருந்து நாராயண் ஆகும் உண்மையான கதையாகும்.

நான் என் திருஷ்டியில் இன்று நாராயண் ஆவதற்கான நோக்கத்தை வைத்திருக்கிறேன். நான் என்னையும் மற்றவர்களையும் மனிதர்களில் மேன்மையானவர்கள் என்று பார்க்கிறேன்.

## ஒரு அலையை உருவாக்குதல்

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையை செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம் முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*